# ERODE DISTRICT AMATEUR KABADDI ASSOCIATION

(Affiliated to Tamilnadu Amateur Kabaddi Association)

No. 60, Saradhamariamman Kovil Street, Gobichettipalayam, Erode - 638 452.

| Chairman | President | Secretary (Incharge) | Treasurer | Organizing Secretary |
|---|---|---|---|---|
| S.K.Ramasamy. LIC | P.Rajakumar | A.C.Thangavel | P.Vijayakumar | K.Gangadharan |
| Sundakkapalayam | Gobichettipalayam<br>97892 23379<br>yazhinirajkumar2000@gmail.com | Joint Secretary<br>Chennimalai<br>99415 21256 | Erode<br>98427 53547 | Erode<br>K.Velliangiri<br>Chennimalai |


DATE : 28.04.2026

## ஈரோடு மாவட்ட கபாடி விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கான விதிமுறைகள்

1. ஈரோடு மாவட்ட அமெச்சூர் கபாடி அசோசியேஷனில் பதிவு செய்துள்ள கபாடி அணிகள் சப் ஜூனியர், ஜூனியர், சீனியர், (ஆண்கள் மற்றும் பெண்கள்) பிரிவுக்கான ஈரோடு மாவட்ட கபாடி சேம்பியன்ஷிப் போட்டியில் தவறாது கலந்துகொள்ள வேண்டும்.

2. ஈரோடு மாவட்ட அமெச்சூர் கபாடி அசோசியேசன் சார்பில் சேம்பியன்ஷிப் தவிர்க்க முடியாத காரணங்களால் நடத்திட இயலாத சூழ்நிலையில் ஈரோடு மாவட்ட அளவிலான செலெக்சன் டிரைல்ஸ் (பொறுக்கு தேர்வு) நடைபெறும்பொழுது சப் ஜூனியர், ஜூனியர், சீனியர், வீரர் மற்றும் வீராங்கனைகள் தவறாமல் கலந்துகொள்ள வேண்டும்

3. கபாடிவீரர்கள் மது அருந்தி விளையாடினால் ஈரோடு மாவட்ட அமெச்சூர் கபாடி அசோசியேஷன் மூலம் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்

4. ஒவ்வொரு போட்டியிலும் போட்டி துவங்கும் நாள் இரவு 12.00 மணிக்கு முன்னதாக வருகை தந்து குறைந்தது 10 வீரர்களுடன் வந்து குழு புகைப்படம் எடுத்து தங்கள் அணியை பதிவு செய்ய வேண்டும். ஏனைய 4 வீரர்கள் மட்டுமே மறுநாள் வருகைதந்து விளையாட அனுமதிக்கப்படுவார்கள்.

5. ஒவ்வொரு போட்டியிலும் போட்டி துவங்கும் நாள் இரவு 10 வீரர்கள் வராமல் 7 பேர், 8 பேர், 9 பேர், என வீரர்கள் வைத்து எந்த அணி புகைப்படம் எடுத்தாலும் 10 வீரர்கள் வந்ததாக தான் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும் மறுநாள் மீதி உள்ள 4 வீரர்களுக்கு மட்டுமே அனுமதி உண்டு. பயிற்சியாளர் என யாரேனும் புகைப்படத்தில் இருந்தால் அவர்களும் வீரர்களாகத்தான் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**6.** இரவு 12.00 மணிக்குள் அணியின் 10 வீரர்களுடன் வந்து குழு புகைப்படம் எடுத்து நுழைவுக்கட்டணம் செலுத்தும் அணிகளுக்கு போட்டியில் கலந்துகொள்ள பதிவு வழங்கப்படும். (7 வீரர்கள் வந்து குழு புகைப்படம் எடுத்து நுழைவுக்கட்டணம் செலுத்தினாலும் விளையாட அனுமதி வழங்கப்படும்)

**7.** போட்டி துவங்கும் நாள் இரவு 7 பேர், 8 பேர், என விளையாடிவிட்டு மறுநாள் புதிதாக 7 பேர், 6 பேர், என விளையாடுவதற்கு எந்த அணிக்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

8. AKFI விதிமுறைகளின்படி 14 பேர் விளையாட அனுமதி உண்டு. ஆனால் போட்டி துவங்கும் நாள் 10 வீரர்கள் கண்டிப்பாக வந்துவிட வேண்டும் மறுநாள் 4 வீரர்கள் மட்டுமே புதிதாக விளையாட அனுமதி உண்டு.

**9.** மாவட்ட மாநில, தென்னிந்திய, அகில இந்திய, போட்டிகளுக்கு லீக் சுற்று போட்டிகள் குழுக்கள் முறையில் போடப்பட மாட்டாது.

**10.** மாநில, தென்னிந்திய, அகில இந்திய, போட்டிகளுக்கு வரும் வெளி மாவட்ட அணிகள் 150 கிலோமீட்டர் தூரத்திற்கு அப்பால் இருந்து வந்தால் வருகை நேரம் குறித்து பதிவு நேரம் நீட்டிப்பு செய்யப்படும்.

**11.** ஈரோடு மாவட்டத்தில் நடைபெறும் கபாடி போட்டியில் 85 கிலோ எடை துல்லியமாக கடைபிடிக்கப்படும், எடை குறித்து மைதானத்தில் சர்ச்சை ஏற்படும் பொழுது எப்போது எதிர் அணி கேட்டாலும் 85.5 கிலோ எடை வரை மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள். அதற்குமேல் கண்டிப்பாக அனுமதி இல்லை.

**12.** கமிட்டி அணி நேரடியாக முன் கால்கட்ட போட்டிக்கு கொண்டு செல்வதை அனுமதிக்கபடமாட்டாது.

13. தென்னிந்திய, அகில இந்திய, போட்டிகளில் மாநில கபாடி கழக அனுமதி இருந்தால் வீரர்களுக்கு OPEN MATCH. ஆக விளையாட அனுமதிக்கப்படும்.

14. ஒவ்வொரு போட்டி நடத்தும் இடங்களில் குறிப்பிட்ட அணியின் பயிற்சியாளரை தவிர்த்து வேறு அணியின் வீரரோ, பயிற்சியாளரோ, நடுவர்களிடம் தேவையற்ற வாக்குவாதம் செய்தால் அந்த அணியின் மீது ஒழுங்குநடவடிக்கை எடுக்கப்படும்.

15. ஒவ்வொரு போட்டியிலும் குறிப்பிட்ட நேரத்தில் ஆடுகளத்தில் இறங்காமல் பலமுறை அழைப்பு கொடுத்தும் செவி சாய்க்காமல் காலதமதமாக வரும் அணிகளுக்கு பரிசு பணத்தில் 20% பிடித்தம் செய்து வழங்கப்படும்

16. ஈரோடு மாவட்ட அணிகளுக்கு கட்டாயம் தாய் சேய் திட்டம் பின்பற்றப்படும். (தாய் சேய் திட்ட அடையாள எண் இருக்கவேண்டும்)

17. ஈரோடு மாவட்ட வீரர்கள் நமது மாவட்டத்தில் நடைபெறும் போட்டிகளில் பிற மாவட்ட வீரர்களுடன் கலந்து விளையாட அனுமதியில்லை (பள்ளி மற்றும் கல்லுரியில் படிக்கும் வீரர்கள் தவிர).

18. விளையாட்டு மைதானத்தில் போட்டி நடைபெறும் பொழுது இரு அணி வீரர்களும் ஒருவருக்கு ஒருவர் வாக்குவாதத்தில் ஈடுபடக்கூடாது.

19. அனைத்து அணி வீரர்களும் போட்டி நடைபெறும் இடத்திலிருந்து 500 மீட்டர் சுற்றளவில்தான் இருக்கவேண்டும்.

20. அனைத்து அணி வீரர்களும் போட்டி நடைபெறும் பொழுது நடுவர்களிடமோ மற்ற வீரர்களிடமோ வாக்குவாததில் ஈடுபட்டு தகாத வார்த்தைகளில் பேசினால் அந்த வீரர்களின்மீது மாவட்ட நிர்வாகம் மூலம் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

21. விளையாட்டு வீரர்கள் அனைவரும் முறையாக ஒரேமாதிரியான சீருடையில் கலந்துகொள்ள வேண்டும்.

22. விளையாட்டு போட்டி நடைபெறும் பொழுது சந்தேகமோ அல்லது குழப்பமோ ஏற்ப்படும் பட்சத்தில் அந்த அணியின் தலைவரோ அல்லது பயிற்சியாளரோ யாரேனும் ஒருவர் மட்டுமே நடுவரிடம் நாகரீகமான முறையில் முறையிட வேண்டும்.

23. நமது ஈரோடு மாவட்ட அணிகள் அனைத்தும் நமது மாவட்டத்தில் போட்டிகள் நடைபெறும்பொழுது நமது மாவட்ட போட்டிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து கலந்து கொண்டு விளையாட வேண்டும்.

24. அணைத்து அணிகளின் சீனியர் வீரர்கள் தங்களது அணியில் விளையாடும் சப் ஜூனியர், ஜூனியர், வீரர்களின் திறமையை மேம்படுத்த ஊக்குவிக்க வேண்டும்.

25. வயது மற்றும் எடைப்பிரிவு போட்டிகள் நடைபெறும் சமயத்தில் கலந்துகொள்ளும் வீரர்களின் எடையும் வயதும் சரியாக இருக்க வேண்டும். விதிமுறையை சரியாக கடைபிடிக்காத வீரர்கள் மற்றும் போலி வயது சான்றிதழ் பயன்படுத்தும் வீரர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

26. ஈரோடு மாவட்ட விதிமுறைப்படி முன் கால்கட்ட போட்டிகள் அனைத்தும் குலுக்கல் முறையில்தான் நடைபெறும்.

# ERODE DISTRICT AMATEUR KABADDI ASSOCIATION

(Affiliated to Tamilnadu Amateur Kabaddi Association)

No. 60, Saradhamariamman Kovil Street, Gobichettipalayam, Erode - 638 452.

| Chairman | President | Secretary (Incharge) | Treasurer | Organizing Secretary |
|---|---|---|---|---|
| S.K.Ramasamy. LIC | P.Rajakumar | A.C.Thangavel | P.Vijayakumar | K.Gangadharan |
| Sundakkapalayam | Gobichettipalayam<br>97892 23379<br>yazhinirajkumar2000@gmail.com | Joint Secretary<br>Chennimalai<br>99415 21256 | Erode<br>98427 53547 | Erode<br>K.Velliangiri<br>Chennimalai |


27. விளையாட்டு வீரர்கள் விளையாடும்போது எந்த சூழ்நிலையிலும் நேர்மை தவறாது நடந்து கொள்ளவேண்டும்.

28. நடுவர்களிடமும்,மற்ற அணி வீரர்களிடமும் மற்றும் விழாக்குழுவினரிடமும் நேர்மையாகவும்,கன்னியமாகவும் நடந்து கொள்ள வேண்டும்.

29. கால அட்டவனையை வீரர்கள் வர தாமதமாகிறது என்று சொல்லி மாற்றி அமைக்கும்படி வற்புறுத்த கூடாது.

30. FIXTURES தனது அணிக்கு சாதகமாக போடும்படி நடுவர்களிடமும்,விழாகமிட்டியினருடனும் வற்புறுத்த கூடாது.

31. ஈரோடு மாவட்ட கபாடி வீரர்கள் வீராங்கனைகள் அனைவரும் EDAKA அனைத்து விதிமுறைகளையும் பின்பற்றி விளையாட வேண்டும்.

தலைவர்

P. Raj... 28/04/2026

(பெ.ராஜகுமார்)

ஈரோடு மாவட்ட அமெச்சூர் கபாடி அசோசியேஷன்.

செயலாளர்(பொறுப்பு) / பொருளாளர் மற்றும் நிர்வாகிகள்.

P. RAJAKUMAR
PRESIDENT
Erode Dt. Amateur Kabaddi Association.
ERODE - 638 452.